Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 20 2025

புதன்கிழமை 20, ஓகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 032 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## 3 மனுக்கள் தாக்கல்



ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு 3 மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன சபைக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2

தமிழரசுக் கட்சியினால் அழைப்பு விடுக்கப்பட்ட ஹர்த்தாலில்

# “100% கடைகள் மூடப்படவில்லை”



தமிழரசுக் கட்சியினால் அழைப்பு விடுக்கப்பட்ட ஹர்த்தாலினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நூற்றுக்கு நூறு சதவீதம் கடைகள் மூடப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஹர்த்தாலை பலவீனமடைய செய்ய வேண்டும் என்று ஒரு தரப்பினர் செயற்பட்டுள்ளார்கள் என தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) அன்று இடம்பெற்ற பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில்,

எம்மால் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அழைப்பு விடுக்கப்பட்ட ஹர்த்தால் பற்றி ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கியவர்களும், ஆதரவு வழங்காதவர்களும் பல்வேறு விடயங்களைக் கூறுகின்றனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியால் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய அரசியல் கட்சிகளுக்கும், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அதேபோல, வடக்கு, கிழக்கு மாகாண வர்த்தக சங்கங்கள், சிவில் அமைப்புக்கள் உட்பட பொதுமக்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

முல்லைத்தீவு இளைஞனின் மரணத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தோம். இந்த விடயம் சமூக வலைத்தளங்களில் திரிபுபடுத்தப்பட்டுள்ளது. இந்த ஹர்த்தால் தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சரவை பேச்சாளர் விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இராணுவத்தின் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி P2



வடக்கில் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள்

# “போலி பரப்புரைக்கு உயிர்கொடுக்க முயற்சி”

### அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிப்பு

“இந்த ஆட்சி கவிழும் என வங்குரோத்து அடைந்த அரசியல்வாதிகள் பிரச்சாரம் முன்னெடுத்து வருகின்றனர். இந்த போலி பரப்புரைக்கு வடக்கில் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகளும் உயிர்கொடுக்க முற்படுகின்றனர்" என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# “ஜே.வி.பியே இல்லாதொழித்தது”

2024ஆம் ஆண்டு ஒக்டோபர், நவம்பர் மாத காலப்பகுதியில் நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு உயர்வாக காணப்பட்ட நிலையில், தற்போது அந்தக் கையிருப்பு எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இது சிவப்பு எச்சரிக்கை.அன்று சகல அபிவிருத்தி திட்டங்களுக்கும் ஜே.வி.பியே எதிர்ப்பு தெரிவித்து அனைத்தையும் இல்லாதொழித்தது. அன்று எதிர்த்த முதலீட்டுத் திட்டங்களை இன்று ஏற்கிறார்கள் இதுதான் கர்ம வினை என ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட எம்.பி. கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “கசினோ, கஞ்சா காரர்களாகிவிட்டனர்”



கசினோக்களை அமைத்து கஞ்சாவைப் பயிரிட்டு பொருளாதாரத்தை வளர்க்கப் போவதாக அன்று அரசாங்கத்தைப் பார்த்து விமர்சித்தவர்கள் இப்போது, தங்களின் அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைத் திட்டத்திற்குள் கசினோவையும் கஞ்சாவையும் இணைத்துள்ளனர். எங்களை விடவும் அதிகமாக அதனை சமூகத்திற்குக் கொண்டு செல்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனஎம்.பியான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## கிஷோர் மஹ்பூபானியுடன் சஜித் பிரேமதாச சந்திப்பு

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் ஆசிய ஆராய்ச்சி நிறுவனத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் புகழ்பெற்ற இராஜதந்திரியும் கல்வியாளரும் எழுத்தாளருமான கிஷோர் மஹபூபானி இடையே விஷேட சந்திப்பொன்று செவ்வாய்க்கிழமை(19) அன்று நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## அரசு நிறுவனங்களுக்கு சைபர் பாதுகாப்பு



தேசிய தகவல் உள்கட்டமைப்பைப் பராமரிக்கும் அரசு நிறுவனங்களைத் தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மையத்துடன் இணைப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தொடர்ச்சி P2

## “இருமுறை யோசிக்கவும்”



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தைக் குறைக்கும் அரசாங்கத்தின் முடிவு குறித்து ஒருமுறைக்கு இருமுறை யோசிக்குமாறு ஜனாதிபதியிடம் ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மன்றத்தின் தலைவரான முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஹர்த்தாலை தோற்கடித்த மக்களுக்கு நன்றி



தமிழரசுக் கட்சியின் ஹர்த்தாலை தோற்கடித்த வடக்கு, கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம் என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “பணம் அச்சிட இயலுமை இல்லை”

அரசாங்கம் பணம் அச்சிடுவதாக கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லை. தற்போதைய நிலைமையில் பணம் அச்சிடுவதற்கு அரசாங்கத்துக்கு இயலுமையும் இல்லை. சட்ட ரீதியில் அதற்கு அனுமதியும் இல்லை எனத் தெரிவித்த நிதி பிரதி அமைச்சர் அனில் பெர்ணான்டோ,

தொடர்ச்சி P2

## மாகாண சபை தேர்தல் எப்போது?

மாகாண சபைத் தேர்தல் அடுத்தாண்டு நடத்தப்படும் என்று சபை முதல்வர் அறிவித்துள்ளார்.பழைய தேர்தல் முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் உடனடி நடவடி க்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்திய த் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா.சாணக்கியன்,

தொடர்ச்சி P2











6 கட்சிகளின் தலைவர்கள்

# ஓய்வூதியத்தை இழப்பர்

பாராளுமன்ற உறுப்பினர் ஓய்வூதியத்தை ரத்து செய்வதற்கான அரசாங்கத்தின் முடிவால், ஆறு கட்சித் தலைவர்கள் தங்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஓய்வூதியத்தை இழப்பார்கள் என்று பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

விமல் வீரவன்ச, டி.டபிள்யூ. குணசேகர, திஸ்ஸ விதாரண மற்றும் வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட ஆறு கட்சித் தலைவர்கள் தங்கள் ஓய்வூதியத்தை இழப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “100% கடைகள் மூடப்படவில்லை”

இதனைத் தொடர்ந்தே ஹர்த்தாலை மதியம் வரை வரையறுக்கத் தீர்மானித்தோம். உயிரிழந்த இளைஞனுக்கும், இராணுவத்தினருக்கும் தொடர்புள்ளது. அதனடிப்படையில், இராணுவத்தினர் ஒரு சிலர் கைது செய்யப்பட்டார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.அனைத்து இராணுவ முகாம்களையும் அகற்ற வேண்டும். ஒரு முகாம் கூட இருக்க கூடாது என்று நாங்கள் ஆரம்பத்தில் குறிப்பிடவில்லை.

இராணுவத்தின் நிலைப்பாட்டுக்கும், பொலிஸாரின் நிலைப்பாட்டுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இராணுவ முகாமுக்குள் வந்த ஒரு இளைஞனை அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைத்ததாக இராணுவ ஊடகபி பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். முகாமுக்குள் அத்துமீறிய வகையில் இவர்கள் சென்றிருந்தால் அவர்களை கைது செய்து பொலிஸில் ஒப்படைத்திருக்க வேண்டும். இவ்விடயத்தில் சிக்கல் காணப்படுகிறது.

வடக்கு, கிழக்கில் பொதுமக்கள் மத்தியில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். எம்மை இனவாதியாக சித்திரிக்க ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நூற்றுக்கு நூறு சதவீதம் கடைகள் மூடப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஹர்த்தாலை பலவீனடைய செய்ய வேண்டும் என்று ஒரு தரப்பினர் செயற்பட்டுள்ளார்கள். ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் அவ்வாறு செயற்பட்டுள்ளார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணுங்கள், பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்யுங்கள் என்று வலியுறுத்துகிறோம். நாங்கள் ஜனநாயக கொள்கைக்கு அமைவாகவே செயற்படுகிறோம். எமது பிரச்சினைகளுக்கு இணக்கமான தீர்வினையே எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## கிஷோர் மஹ்பூபானியுடன்...

கொள்கை வகுப்பு, நிர்வாகம் மற்றும் சமாதானத்தைக் கட்டியமைத்தல் ஆகிய தலைப்புகளில் இரு தரப்பினரும் முக்கியமாக விஷேட கலந்துரையாடல்களை நடத்தினர். இதில், சிங்கப்பூரின் பொருளாதார மாற்றத்தை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் இரண்டும் ஒரு வலுவான கொள்கை வகுத்தல் செயல்முறையின் விளைவாகும் என்று சஜித் பிரேமதாச தெளிவுபடுத்தினார். எனவே, சிங்கப்பூரின் அனுபவத்திலிருந்து இலங்கை பல தனித்துவமான பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும் என்றும், பயனுள்ள மற்றும் மக்களை மையமாகக் கொண்ட கொள்கைகளை வகுக்கும்போதும் அவர்களின் திறனை மேம்படுத்துகின்ற போதும் இலங்கையின் அரச தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், குறிப்பாக, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் தமது நிபுணத்துவ அறிவை பகிர்ந்துகொள்வதில் இணையுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள் திரு. கிஷோர் மஹபூபானியிடம் கேட்டுக் கொண்டார்.

சிங்கப்பூரில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பல நடைமுறைப் பாடங்கள் உள்ளன என்றும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இலங்கைக்கு வருகை தந்து கொள்கை வகுப்பாளர்களுடன் நேரடியாக ஈடுபடுமாறு திரு. கிஷோர் மஹாபூபானிக்கு கௌரவமான அழைப்பை விடுத்தார். இவை தவிர, இரு தலைவர்களும் அமைதி, சமாதானம் மற்றும்

சமூக நீதியின் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடினர். நேர்மை, உள்ளடக்கம் மற்றும் பகிரப்பட்ட செழிப்பு ஆகியவற்றுடன் நிலைத்தன்மை இணைந்து செல்ல வேண்டும் என்றும், பொருளாதார வளர்ச்சி அனைத்து குடிமக்களுக்கும் பயனளிப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

கிஷோர் மஹபூபானி ஒரு பிரபலமான சிங்கப்பூர் இராஜதந்திரியும் கல்வியலாளரும் எழுத்தாளருமாவார். அவர் ஐக்கிய நாடுகள் சபைக்கான சிங்கப்பூரின் நிரந்தர பிரதிநிதியாகவும், இரண்டு முறை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலின் தலைவராகவும் பணியாற்றினார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் லீ குவான் யூ பொதுக் கொள்கைக் கல்லூரியின் ஸ்தாபக பீடாதிபதியாகவும், தற்போது ஆசிய ஆராய்ச்சி நிறுவனத்தின் சிறப்பு உறுப்பினராகவும் கடமையாற்றுகிறார்.

## 3 மனுக்கள் தாக்கல்

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (19) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. இதனையடுத்து இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின்போதே இதனை சபைக்கு அறிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம், ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று மனுக்களின்

பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளன என்றார்.

## “போலி பரப்புரைக்கு...

இலங்கை ஐயப்ப சுவாமிமார்களின் யாத்திரையினை புனித யாத்திரையாக பிரகடனப்படுத்தியதன் பின்னர் அது தொடர்பான விசேட கலந்துரையாடல் கொழும்பு செட்டியார் தெரு கல்யாண முருகன் மண்டபத்தில் திங்கட்கிழமை (18) அன்று இடம்பெற்றது.

ரவி குருசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சிறப்பு அதிதியாகக் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் பிரதம அதிதியாகவும், இந்து சமய அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் வை.அனிருத்தன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

நாடளாவிய ரீதியில் உள்ள ஐயப்ப நாமத்தில் இயங்கும் அமைப்புக்கள், குரு சுவாமிகள் மற்றும் ஐயப்பன் தொடர்புடைய அமைப்புக்களின் உறுப்பினர்கள் என பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது, சுவாமிமார்களால் பரிந்துரைக்கப்பட்ட ஐயப்ப மாலை அணிந்த சுவாமிமார்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் இருந்து வருகைதந்த ஐயப்பசாமி குருமார்கள் தங்களது கருத்துக்களையும் முன்வைத்தனர். அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர்களை குருசுவாமிகள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இதன்போது கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் கூறியவை வருமாறு,

“ஐயப்பன் யாத்திரை கடந்த காலங்களில் புனித யாத்திரையாக பிரகடனப்படுத்தப்படவில்லை. இதற்குரிய முயற்சி முன்னெடுக்கப்பட்டும் ஏன் அத்தனை வருடங்கள் நடக்கவில்லை? இனவாத ஆட்சியாளர்கள், இனவாத அமைச்சரவை இருந்ததால்தான் நடக்கவில்லை. ஆனால் எமது சமதர்ம ஆட்சியில் இனவாதம் இல்லை. மக்கள் நலனுக்கே முக்கியத்துவம், முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அந்தவகையில் புனித யாத்திரை தொடர்பான அமைச்சரவை பத்திரம் வந்தபோது அதற்கு ஏகமனதாக ஆதரவளிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றார்.

## “கசினோ, கஞ்சா காரர்களாகிவிட்டனர்”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) இடம் பெற்ற பணச் சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில்,

அரச வருமானம் தொடர்பில் கதைக்கின்றனர். அதிகளவில் வரிகளை அறவிட்டு மக்கள் மீது வரிச் சுமைகளைச் சுமத்துகின்றனர். இவ்வாறு மக்கள் மீது வரிகளை அறவிட்டு அரச வருமானம் அதிகரித்துள்ளதாகக் கூறுகின்றனர். இந்த வருமானத்தால் மக்களுக்கு என்ன கிடைக்கின்றது. மின் கட்டணத்தைக் குறைப்பதாகவும், உர மானியங்களை வழங்குவதாகவும் கூறினர். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

அரிசியும் வெளிநாட்டில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது. இங்குள்ள விவசாயிகளின் நிலைமை தொடர்பில் அரசாங்கம் தேடிப்பார்ப்பதில்லை. நீங்கள் அதிகரித்த அரச வருமானத்தில் மக்களுக்கு என்ன கிடைத்தது. எதுவும் இல்லை. அன்று எங்களைப் பார்த்துக் கொள்ளையடிப்பதாகக் கூறினர். அது போன்று நாங்கள் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதில்லை. சில இடங்களில் நடப்பது தொடர்பில் கூடிய விரைவில் தெரியவரும் என்றார்.

## “ஜே.வி.பியே இல்லாதொழித்தது”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) அன்று இடம்பெற்ற பணச் சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன திறந்த பொருளாதாரக் கொள்கைக்காகப் பல வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குக் கொண்டு வந்தார். ஜே.வி.பி. உள்ளடங்களாக இடதுசாரி கட்சிகள் அதற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டன. நாட்டின் பொருளாதார சாபத்தின் பிரதான பங்காளி ஜே.வி.பி. தான் கடந்த கால அரசாங்கங்கள் காலத்தின் தேவையறிந்து கொண்டு வந்த சகல அபிவிருத்தி திட்டங்களுக்கும் ஜே.வி.பியே எதிர்ப்பு தெரிவித்து அனைத்தையும் இல்லாதொழித்தது. அன்று எதிர்த்த முதலீட்டுத் திட்டங்களை இன்று ஏற்கிறார்கள் இதுதான் கர்ம வினை. பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகார சபை ச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மத அடிப்படையில் சூதாட்டத்துக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம். பொருளாதார மீட்சிக்குரிய ஒரு முறைமையாக இதனை அரசாங்கம் அறிமுகப்படுத்துகிறது. பணச்சூதாட்டம் முறையாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளோம். இந்த சட்டமூலம் பல குறைபாடுகளுடன் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்படும் அதிகார சபைக்குத் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் நிதியமைச்சின் செயலாளர் மற்றும் நிதியமைச்சரால் நியமிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் முறையற்றது. இந்த அதிகார சபைக்கான நியமனம் அரசியலமைப்பு பேரவை ஊடாக வழங்கப்பட வேண்டும்.

அத்துடன், அதிகார சபைகளின் சட்டத்திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை தயாரிக்கும் அதிகாரம் நிதியமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

## “பணம் அச்சிட இயலுமை இல்லை”

அமெரிக்காவின் வரி தொடர்பில் இந்தியாவுக்கு ஏற்பட்ட விடயம் தொடர்பில் நாங்கள் ஒருபோதும் இந்தியாவைப் பார்த்துச் சிரிக்கவில்லை. எதிர்க்கட்சியினரே தங்களின் தவறை மறைப்பதற்கு இவ்வாறான பொய் பிரசாரம் ஒன்றை மேற்கொண்டனர் எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) அன்று இடம்பெற்ற பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், அரசாங்கம் ஒரே நேரத்தில் இரண்டு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றது.. அதாவது நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதுடன் எமது பொருளாதாரத்தை விரிவாக்குவதற்கு போதுமான முதலீடுகளைக் கொண்டுவர வேண்டி இருக்கிறது. முதலீட்டாளர்களை அழைத்து வருவதே மிகவும் முக்கியமானது . அதேபோன்று முதலீட்டாளர்களின் நம்பிக்கையை ஸ்திரப்படுத்துவதும் முக்கியம்.

இவற்றை நாட்டுக்குள்ளும் நாட்டுக்கு வெளியிலும் ஸ்திரப்படுத்தி வரும்போது, எங்களுக்கு நாட்டுக்குள் இருந்து, எதிர்க்கட்சியில் தெரிவுசெய்யப்பட்ட சில குழுக்கள் அரசியல் நோக்கில் திட்டமிட்டோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இந்த ஸ்திரத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பல விடயங்களை மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக அரசாங்கம் பாரியளவில் பணம் அச்சிடப்போவதாக சமூகத்தில் பீதியை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன. இவர்கள் இதனை திட்டமிட்டு மேற்கொள்கின்றனர். அல்லது புரியாமல் மேற்கொள்கின்றனர். எமது அரசாங்கத்தினால் 1,200 பில்லியன் பணம் அச்சிட்டுள்ளதாக ஒரு அமைப்பு தெரிவித்திருக்கிறது.

அரசாங்கத்தின் தற்போதைய நிலைமையில் பணம் அச்சிடுவதற்கு அரசாங்கத்துக்கு இயலுமையும் இல்லை . சட்ட ரீதியில் அதற்கு அனுமதியும் இல்லை.அதனால் நாங்கள் பணம் அச்சிடுவதில்லை. அதேநேரம் பணம் அச்சிடுவதென்றால் நாணயத் தாழ்களை அச்சிட்டு சந்தைக்கு விநியோகிப்பது என்றே சிலர் நினைக்கின்றனர். ஆனால் அவ்வாறு இல்லை. இங்கு பணம் அச்சிடுவது என்பதன் அர்த்தம், சந்தைக்கு பணத்தை விரிவாக்குவதாகும். நாட்டில் இருக்கும் கையிருப்பு பணத்தை மத்திய வங்கியே நிர்வகித்து வருகிறது. அரசாங்கம் எந்தவகையிலும் நிதி விநியோகத்தை அதிகரித்ததில்லை. நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு தொகை மற்றும் அரசாங்கத்திடம் இருக்கும் பணத்தொகை மத்திய வங்கியின் இணையத்தலத்தில் வாராந்தம் வெளியிடப்படுகிறது. பிழையான தகவல் தெரிவிப்பவர்கள் இதுதொடர்பில் அறிந்துகொள்ளலாம்.

எனவே அரசாங்கம் பணம் அச்சிட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் செய்தியில் எந்த உண்மையும் இல்லை. இது மக்களை ஏமாற்றுவதற்காக தெரிவிக்கப்படும் செய்தி நாட்டில் வெளிநாட்டு கையிருப்பாக 1.6 ரில்லியன் இருப்பதுடன் விரிவான நிதி விநியோகம் 15 ரில்லியன் வரை இருக்கிறது. கடந்த வருடத்துடன் ஒப்பிட்டு பார்க்கையில் விரிவான நிதி அபிவிருத்தியில் ஓரளவு அதிகரிப்பு காணப்படுகிறது. அதாவது மத்திய வங்கியின் செயற்பாடுகளின் மூலமே அது இடம்பெற்றிருக்கிறதே தவிர, அரசாங்கததின் நடவடிக்கையால் அல்ல. அதாவது அரசாங்கம் பணம் அச்சிடவில்லை என்பது தெளிவாகிறது என்றார்.

## மாகாண சபை தேர்தல் எப்போது?

மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாடு என்னவென்றும் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) அன்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போதே இவ்வாறு வலியுறுத்திக் கேள்வியெழுப்பிய இரா.சாணக்கியன் எம்.பி. மேலும் பேசுகையில், மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் பல ஆண்டுகாலமாக அரச அதிகாரிகளின் நிர்வாகக் கட்டமைப்பில் உள்ளன.மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகள் இயங்குவது முறையற்றது. இதனால் பாரிய பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தனிநபர் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளேன். இந்த பிரேரணையை அரசாங்க பிரேரணையாகக் கருதி பழைய தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் அடுத்தாண்டு நடத்தப்படும் என்று சபை முதல்வர் அறிவித்துள்ளார். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் மாகாண சபைத் தேர்தலை இந்தாண்டு இறுதிப் பகுதியில் நடத்தலாம் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். ஆகவே, மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாடு என்ன? மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டை அரசாங்கம் அறிவிக்க வேண்டும். பழைய தேர்தல் முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் உடனடி நடவடி க்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்குப் பதிலளித்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிசபைகள் மற்றும் பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன , எந்த தேர்தலையும் பிற்போட வேண்டும் என்ற நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது என்றார்.

## அரசு நிறுவனங்களுக்கு சைபர் பாதுகாப்பு

அரச நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களை குறிவைத்து நடத்தப்படும் சைபர் தாக்குதல்கள், அந்த நிறுவனங்களால் வழங்கப்படும் அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு விளைவிக்கும் அபாயத்தை ஏற்படுத்துகின்றன. மேலும், தனிப்பட்ட மற்றும் உணர்திறன் மிக்க தரவுகளை மற்றவர்களுக்கு இழப்பது குடிமக்களின் தனிப்பட்ட பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, பொருளாதார ஸ்திரத்தன்மை, பொது சுகாதாரம் மற்றும் சமூகத்தின் நல்வாழ்வு, அத்துடன் அரசு நிறுவனங்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையையும் மோசமாகப் பாதிக்கிறது.

எனவே, இத்தகைய அச்சுறுத்தல்கள் மற்றும் அபாயங்களைக் குறைப்பதற்காக, தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மையம், இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு மன்றம் மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் நிறுவப்பட்டுள்ளது.

தேசிய சைபர் தொழில்நுட்ப செயல்பாட்டு மையம், 24 மணி நேரமும் சைபர் அச்சுறுத்தல்களைக் கண்காணித்து, அடையாளம் கண்டு, பதிலளிக்கிறது, அத்துடன் எந்தவொரு வகையான தீங்கிழைக்கும் மென்பொருளாலும் ஏற்படும் சேதம் மற்றும் அங்கீகரிக்கப்படாத அணுகலைக் கண்டறிந்து எச்சரிப்பதற்கான வசதிகளையும் வழங்குகிறது.

அதன்படி, தொடர்புடைய அமைச்சக செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனத் தலைவர்கள் தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மையத்துடன் தொடர்ந்து ஈடுபடவும் அதன் தொழில்முறை சேவைகளைப் பெறவும் பணிப்பதற்காக டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

## ஓய்வூதியத்தை இழப்பர்

இதற்கிடையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் விதவைகள் ஓய்வூதியத்தை இழக்க நேரிடும்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் கிட்டத்தட்ட நூற்று ஐம்பது விதவைகள் ஓய்வூதியம் பெறுவார்கள் என்று அவர் கூறினார்.

இதற்கிடையில்லோகன் ரத்வத்தேவின் மறைவைத் தொடர்ந்து, அவரது மனைவி ஓய்வூதியத்திற்கு உரிமை பெறுவார் என்று பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில், ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமசிறி மானகே, உலகிலேயே அவர்களின் ஓய்வூதியத்தையும் பறிக்கும் ஒரே நாடு இலங்கை என்று கூறினார்.

வேலையில்லாத பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இழப்பது மனித உரிமை மீறல் என்றும் அவர் கூறினார்.

இந்தக் காரணத்திற்காக, ஓய்வூதியங்களைக் குறைப்பதற்கு முன் அரசாங்கத்தை இருமுறை யோசிக்குமாறு பிரேமசிறி மானகே கேட்டுக்கொள்கிறார்.

## “இருமுறை யோசிக்கவும்”

சுமார் 490 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களது விதவைகளும் இந்த ஓய்வூதியத்தைச் சார்ந்து இருப்பதாகக் கூறிய ஜயசூரிய, ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலான மக்கள் இந்த ஓய்வூதியத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர் என்றார்.

நான்கு கட்சித் தலைவர்களும் இந்த ஓய்வூதியத்தைச் சார்ந்து இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

## ஹர்த்தாலை தோற்கடித்த...

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) அன்று இடம்பெற்ற பணச் சூதாட்டத்தை ஒழுங்குப்படுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில்,

தமிழரசுக் கட்சி விடுத்த ஹர்த்தால் அழைப்பு வடக்கு கிழக்கில் வெற்றி என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். இந்த ஹர்த்தால் தோல்வி என்றே குறிப்பிட வேண்டும். வடக்கு , கிழக்கு மாகாண தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் இரண்டாவது தடவையாகவும் இனவாதத்தைத் தோற்கடித்துள்ளார்கள். எனவே, வடக்கு, கிழக்கு மாகாண தமிழ்,முஸ்லிம் மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ,சுமந்திரனின் நிலை கவலைக்குரியது. கடந்த காலங்களில் இவர் நடுநிலையான தன்மையில் செயற்பட்டார் ஆனால் தற்போது தனது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக இனவாத சேற்றுக்குழியில் விழுந்துள்ளார் என்றார்.










# கண்ணீரை வரவழைத்த தண்ணீரின் கதை நாடகம்

நல்லூர் முருகன் ஆலய திருவிழாவையொட்டி, ‘நிலத்தடி நீர் எங்கள் உயிர் நாடி’ எனும் தொனிப் பொருளில் வடக்கின் நிலத்தடி நீர் சார்ந்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்த WASPAR & Young Water Professionals முயற்சியில் நீர்வள சபை, நீர்ப்பாசன திணைக்களம், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, யாழ் மாநகர சபை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், யாழ் இந்துக் கல்லூரி மற்றும் பல தன்னார்வலர் அமைப்புகளின் கூட்டு முயற்சியாக வடமாகாண நீர் வளம் பேணுவதற்கான பேராய்வுச் செயற்திட்டத்தின் இரண்டாவது நீர்வளக் கண்காட்சி வெள்ளிக்கிழமை (15) அன்று நல்லூர் பாரதியார் சிலைக்கு அருகில் அமைந்துள்ள நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவன வளாகத்தில் ஆரம்பமாகித் தொடர்ந்து 24ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

நீர்வளக் கண்காட்சியின் ஒரு கட்டமாக ஊருணி ஆற்றுகைக் களத்தில் பல்வேறு ஆற்றுகை நிகழ்வுகளும், கலந்துரையாடல்களும் தினமும் மாலை வேளையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் திங்கட்கிழமை (18) மாலை செம்முகம் ஆற்றுகைக் குழுவின் "தண்ணீரின் கதை" நாடக ஆற்றுகை இடம்பெற்றது. நிலத்தடி நீரை மட்டும் நம்பியிருக்கும் யாழ்ப்பாணத்தில் எதிர்காலத்தில் தண்ணீர் இல்லாமல் போனால் என்னவாகும் என்பதைச் சித்திரிக்கும் வகையில் நாடகம் உயிர்ப்புள்ளதாக இருந்தது. பார்வையாளர்களைக் கண்ணீரில் நனைய வைத்த நாடகத்தின் பின் பலரது அனுபவ பகிர்வுகளும் உருக்கமாக அமைந்திருந்தன.

நீர்வளக் கண்காட்சியின் ஐந்தாம் நாளான செவ்வாய்க்கிழமை(19) அன்று ஆற்றுகை நிகழ்வாக பாடல் நிகழ்வுகளும், ‘கேணி: நீர் மரபுரிமைக் கட்டுமானங்களை காக்க வேண்டி சில முன்வைப்புகள்’ என்கிற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், ஆய்வாளருமான அகிலன் பாக்கியநாதன் அவர்களின் கருத்துரையும் உரையாடலும் இடம்பெறும்.

நிலத்தடி நீரும் எமது பிரதேச நில கட்டமைப்பு மற்றும் வழுக்கையாறு திட்ட மாதிரிகளின் கண்காட்சிகள், விஞ்ஞான விளக்கங்கள், ஆய்வு முடிவுகள், விளையாட்டுகள், புதிர்ப்போட்டிகளில் பங்கேற்கும் சிறார்களுக்கான ஏராளமான பரிசுப் பொருட்களுடன் நிலத்தடி நீரை பக்குவமாக பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கை இக்கண்காட்சி ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஊழல் மோசடிகள்

# “இரு வார கால அவகாசம் தாருங்கள்”

தெல்லிப்பழை வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் முறையாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தும் இதுவரையில் சம்பந்தப்பட்ட நபர்கள் ஏன் கைது செய்யப்படவில்லை என கேள்வி எழுப்பிய யாழ். மாவட்ட சுயேட்சைக்குழு எம்.பியான அர்ச்சுனா இராமநாதன், இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) அன்று பாராளுமன்ற நிலையியல் கட்டளைகள் 27/2இன் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

மேலும் அர்ச்சுனா எம்.பி. தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான ஒரே ஒரு புற்றுநோய் வைத்தியசாலையாக தெல்லிப்பழை வைத்தியசாலை அமைந்திருக்கிறது. தெல்லிப்பழை வைத்தியசாலையின் ஒரு பகுதியாகப் புற்றுநோய் பிரிவு இயங்கி வருகிறது. இவ் வைத்தியசாலை மாகாண அமைச்சின் கீழ்வரும் பி பிரிவு ஆதார வைத்தியசாலை ஆகும். இந்த வைத்தியசாலையில் கணக்காளர் ஒருவர் கடமையாற்றுவதில்லை. இந்த வைத்தியசாலை நேரடியாகப் பிராந்திய வைத்தியசாலை பணிப்பாளர் நாயகம் வைத்தியர் கேதீஸ்வரனின் கீழும் மற்றும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் சமன்பத்திரனவின் கீழும் நிர்வகிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலையில் புற்றுநோய் பிரிவில் பொறுப்பு வைத்தியராகக் கடமை புரியும் வைத்தியர் கிருசாந்தி வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவுக்கான தனிப்பட்ட பண கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொண்ட வங்கி கணக்கிலக்க புத்தகங்கள் இரண்டு பிடிபட்டிருப்பதும் அது தவிரவும் வைத்தியர் கேதீஸ்வரன் புற்றுநோய் பிரிவுக்கான மாகாண பொதுச் செயலாளரின் அனுமதியின்றி 30 மில்லியன் பெறுமதியான கட்டட ஒப்பந்தம் ஒன்றை முறையற்ற விதத்தில் மேற்கொண்டு இருப்பதும் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்திருந்தும் இதுவரை சுகாதார அமைச்சினுடாகவும் அதே நேரம் இலஞ்ச ஊழல் ஆணை குழுவாலும் (2025.06.03) முறையிட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்ட பின்பும் கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்களாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இது இந்த அரசாங்கம் தெற்கில் மட்டும் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவைப் பயன்படுத்தி அரசியல் ரீதியான பழிவாங்கல்களை மேற்கொள்கின்றது என்பதற்கு சிறந்த உதாரணமாக பொது மக்களால் எடுத்துக்கொள்ளப்படக்கூடும். இதனால் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரிடம் பின்வரும் கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்.

அதாவது, இந்த விடயம் தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறையாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தும் (2025.06.03) இன்று வரை சம்பந்தப்பட்ட இது வைத்தியர்களும் கைது செய்யப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன?

2015ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை சம்பந்தப்பட்ட புற்றுநோய் அலகிற்குப் பொதுமக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட அரசாங்கத்தின் கணக்கில் வைப்பில் இடப்படாத பணம் எவ்வளவு? இந்த நிதி மோசடி தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிற்கு ஆராய அதிகாரம் உண்டா?

புற்றுநோய் வைத்தியர் கிருசாந்தியால் பிராந்திய வைத்தியசாலை பணிப்பாளர் நாயகம் வைத்தியர் கேதீஸ்வரனின் அனுசரணையுடன் பொதுமக்களிடமிருந்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டது தங்களுக்குத் தெரியுமா? அப்பணம் தனிப்பட்ட வங்கி இலக்கங்களில் இடப்பட்டு வைத்திய சாலையில் இருந்து களவாடப்பட்டது தங்களுக்குத் தெரியுமா? தெரிந்திருந்தும் ஏன் இன்றுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை?

ஒரு வைத்தியசாலையின் கன்சல்டன் ஒருவர் பொதுமக்கள் இடம் இருந்து நன்கொடையினை வைத்தியசாலை நிர்வாகத்திற்குத் தெரியாமலும் கேதீஸ்வரன் அனுசரணையுடன் பெற்றுக் கொண்டு நிதி நடவடிக்கையில் ஈடுபட முடியுமா?

அந்த வைத்திய சாலையில் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் கட்டட ஒப்பந்தக்காரர் இருவருக்கும் இடையே ஒப்பந்தமின்றி தனிப்பட்ட ரீதியில் முப்பது மில்லியன் பெறுமதியான ஒப்பந்த ஒன்றை வைத்தியர் கேதீஸ்வரன் செய்திருப்பது தெரியுமா? அவ்வாறான ஒப்பந்தம் இலஞ்ச ஊழல் ஆணை குழுவிற்கு முறைப்பாடாக வழங்கப்பட்டும் ஏன் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை?

இந்த விடயங்கள் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களிலும் பாராளுமன்றத்திலும் மேலதிகமாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டு இதுவரை சம்பந்தப்பட்ட வைத்தியர் கைது செய்யப்படாதது ஏன்?

தங்களுடைய அரசாங்கம் இவ்வாறான திட்டமிட்ட ஊழல்களுக்கு எந்த நடவடிக்கை எடுக்காமலும் விசாரணைகள் மேற்கொள்ளாமலும் இருப்பதற்கான காரணம் என்ன?

இனிமேலாவது இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுச் சம்பந்தப்பட்ட கணக்கு இலக்கம் ஆராயப்பட்டு சம்பந்தப்பட்ட கட்டட ஒப்பந்தம் ஆராயப்பட்டு அவர்களைக் கைது செய்து நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்த முடியுமா? என கேள்விகளை எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால இரு வார கால அவகாசம் கோரினார்.



# 17ஆவது நாளாகவும் தொடரும் ஆர்ப்பாட்டம்

■ எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் செவ்வாய்க்கிழமை (19) அன்று 17ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்ட நிலையில், இதில் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மற்றும் மீனவர்கள் கலந்து கொண்டு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் பனங்கட்டிக்கொட்டு, ஜிம் பிரவுன் நகர், எமில் நகர், இத்திக்கண்டல், தலைமன்னார் கிராமம் ஆகிய கிராம மக்களும், மீனவர்களும் கலந்து கொண்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் மன்னார் நகர சுற்று வட்ட பகுதியில் இடம்பெற்று வருகிறதுடன், மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது ஆர்ப்பாட்டம் தொடரும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி ஒரு மாத கால அவகாசம் கோரியுள்ள நிலையில், மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன் வைத்துள்ளதோடு, ஜனாதிபதி உரியத் தீர்வை வழங்கா விட்டால், ஆர்ப்பாட்டம் தொடரும் எனவும் எச்சரித்துள்ளனர்.

# சதீஷ் கமகே மீண்டும் விளக்கமறியலில்



பொலிஸ் திணைக்களத்தின் கலாசாரப் பிரிவின் பிரதி பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஷ் கமகேவை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 02ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (19) அன்று உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ் திணைக்களத்தின் கலாசாரப் பிரிவின் பிரதி பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஷ் கமகே செவ்வாய்க்கிழமை (19) காலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் கலாசாரப் பிரிவின் பிரதி பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஷ் கமகே பல இலஞ்ச குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த 14ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இருவர் கைது



■ டி.கே.ஜி.கபில

சுமார் 59 இலட்சம் 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வந்து கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயன்ற இருவர் விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் செவ்வாய்க்கிழமை(19) அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் திருகோணமலையைச் சேர்ந்த 45 மற்றும் 33 வயதுடைய தொழிலதிபர்கள் என தெரியவந்துள்ளது.

இருவரும் துபாயிலிருந்து சிகரெட்டுகளை வாங்கி, குவைத்திற்கு வந்து, அங்கிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தடைந்தனர்.

அவர்கள் கொண்டு வந்த 4 பெரிய பெட்டிகளில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட “மான்செஸ்டர் செவன்” சிகரெட்டுகள் 39,600 அடங்கிய 198 சிகரெட் அட்டைப்பெட்டிகளைக் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மற்றும் சான்று பொருட்களைப் புதன்கிழமை (20) அன்று நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடலில் பல்டி அடித்த இளைஞன் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு தாழையடி பகுதியில் நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் கடலில் பல்டி அடித்த போது தலையில் காயம் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

தன்னுடைய நண்பர் ஒருவரின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக ஒன்பது நண்பர்கள் இணைந்து உழவு இயந்திரத்தில் பளை கரந்தாய் பகுதியில் இருந்து திங்கட்கிழமை(18) மதியம் தாளையடி கடற்கரைக்கு வந்துள்ளனர். பிறந்தநாளை கொண்டாடிக் கொண்டிருந்த நிலையில் அவர்கள் கடல் விளையாட்டுகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது தலையில் காயமடைந்த இளைஞனை உடனடியாக நண்பர்கள் மீட்டு உழவு இயந்திரத்தில் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதுடன் அவரை பரிசோதித்த வைத்தியர் இளைஞன் ஏற்கெனவே உயிரிழந்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மருதங்கேணி பொலிஸார் சக நண்பர்களிடம் வாக்குமூலம் பெற்றுள்ளதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உலக புகைப்பட தினத்தன்று நினைவுகூருகிறோம்

சர்வதேச புகைப்படக் கலைஞர்கள் தினம் ஒகஸ்ட் 19 ஆம் திகதியன்று அனுஷ்டிக்கப்பட்டது. இது உலக மனிதாபிமான தினமும் கூட. அரசியல்வாதிகளின் ஒப்பந்தக்காரர்களால் போர்க்களங்களிலும் தெருக்களிலும் கொல்லப்பட்ட அனைத்து புகைப்படக் கலைஞர்களும் இந்த நேரத்தில் கௌரவிக்கப்படுகிறார்கள்.

மனிதன் முதலில் கையெழுத்தில் எழுதவில்லை. அவர் முதலில் படங்களை வரையத் தொடங்கினார். இந்த படங்கள் பின்னர் பட வரைபடங்களாக மாற்றப்பட்டன.

எகிப்து மற்றும் சீனாவில், பட வரைபடங்களிலிருந்து பிரத்தியேகமாகக் கையெழுத்து உருவாக்கப்பட்டது. இன்றும் கூட, சீன கையெழுத்து பட வரைபடங்களை அடிப்படையாகக் கொண்டது. ஒரு முழு புத்தகத்தில் சொல்லக்கூடியதை ஒரே புகைப்படத்தில் சொல்லலாம்.

சர்வதேச புகைப்படப் போட்டிகள் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் நடத்தப்படுகின்றன. இன்றும் கூட, கருப்பு மற்றும் வெள்ளை புகைப்படங்கள் வண்ண புகைப்படங்களை விட சிறப்பு வாய்ந்தவை.

இந்த நாட்டில் பத்திரிகை அதன் உச்சத்தில் இருந்தது. எனவே, பத்திரிகையாளர் மிகுந்த ஆற்றலைக் கொண்ட ஒரு நபர். எனவே, அவர் மீட்புக்கு வரும்போது, அரசியல்வாதிகள் அவரைக் கொல்வது பற்றி இருமுறை யோசிப்பதில்லை. இந்த நேரத்தில், பாதாள உலகம் ஒரு வளர்ச்சியடையாத சிறிய நிகழ்வு. அந்த சிறிய நிகழ்விலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு பாதாள உலக நபர் சுத்தம் செய்யப்பட்டு ஒரு துப்பாக்கி கொடுக்கப்பட்டு பத்திரிகையாளர் கொல்லப்பட்டார்.

அந்த நேரத்தில், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் பணிப்பாளர் நாயகமாகவும் இருந்த தேவிஸ் குருகே, 88, 89 பயங்கரவாதத்தின் போது, கொல்லப்பட்ட மிக முக்கியமான நபர். ரிச்சர்ட் டி சொய்சாவும் கொல்லப்பட்டார். ஸ்பெயினில் ஒரு செய்தி நிறுவனத்தில் பெரிய வேலை இருந்தபோதிலும், அவர் அங்கு செல்வதைத் தாமதப்படுத்தி, 88 மற்றும் 89 பயங்கரவாதம் பற்றி இலங்கையிலிருந்து எழுதினார். இதன் விளைவாக, அரச பயங்கரவாதிகள் அவரைக் கொன்றனர்.

கூடுதலாக, லசந்த விக்ரமதுங்க மற்றும் பிரதீப் எக்னலிகொட ஆகியோரும் அரச பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர். பத்திரிகையாளரான எக்னலிகொட ஒரு நாள் அவர் காணாமல் போனார், மீண்டும் ஒருபோதும் காணப்படவில்லை. அவர் இவ்வளவு காலம் ஒளிந்துகொள்ள விரும்பவில்லை. லசந்த விக்ரமதுங்க, அரச பயங்கரவாதிகளால் ஆடுகளைக் கொல்லப் பயன்படுத்தப்படும் ஆயுதத்தால் குத்திக் கொல்லப்பட்டார். சமூக அநீதியைப் பற்றிப் பேசப் போவதால் இந்த மக்கள் தங்கள் உயிரைக் கொடுத்துள்ளனர்.

வடக்கில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த போரின் போது, நமது தமிழ் பத்திரிகையாளர்களில் சிலரும் தங்கள் உயிர்களை இழந்தனர். உள்ளூர் ஊடகச் செய்திகளைச் செய்தியாக வெளியிட்டு வந்த சில பத்திரிகையாளர்கள் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு ஆளானார்கள், மற்றவர்கள் குண்டர்களால் தாக்கப்பட்டனர். அவர்களில் சிலரின் கேமரா உபகரணங்களும் சேதப்படுத்தப்பட்டன.

எந்தவொரு அரசாங்கத்திற்கும் அது எதிர்க்கட்சியில் இருக்கும் வரை மட்டுமே ஊடகங்கள் தேவை. ஆளும் கட்சியில் சேர்ந்த நாளிலிருந்தே பத்திரிகையாளர் அதன் எதிரியாக இருந்து வருகிறார். 'கேமராவை' தங்கள் தொழில்முறை வாழ்க்கை கருவியாக மாற்றியவர்களுக்கு நாங்கள் வணக்கம் செலுத்துகிறோம், அன்றிலிருந்து புகைப்படக் கலைக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த அனைவரையும் உலக புகைப்பட தினத்தன்று நினைவுகூருகிறோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# எதிர்க்கட்சிகளின் தந்திரோபாயம் சரியானதா?



எம்.எஸ்.எம்.ஐயூப்

எதிர்க்கட்சிகள் தமது கடமைகளை முறையாக செய்கின்றனவா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது. அவற்றின் தலைவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கும் பல குற்றச்சாட்டுகள் அவற்றின் பக்கச்சார்பு தன்மை மிகவும் வெளிப்படையாகத் தெரிவதால் மக்கள் மத்தியில் எடுபடுவதும் இல்லை.

வழமையாக பொதுவாக அரசாங்கத்துக்கு எதிராக அல்லது அமைச்சர்களுக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்படுகின்றன. ஆயினும். அம்மரபுக்கு மாறாக 1981ஆம் ஆண்டு அப்போதைய எதிர்க் கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்துக்கு எதிராக ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் தலைமையிலான ஐக்கிய தேசிய அரசாங்கத்தால் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ் ஆயுதக் குழுக்களின் கையொங்கி வந்த நிலையில், பிரிவினைவாதத்துக்கு ஆதரவு வழங்குவதாகக் குற்றஞ்சாட்டியே ஐ.தே.க அப்போது தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவருமான அமிர்தலிங்கத்துக்கு எதிரான அந்தப் பிரேரணையை முன்வைத்தது. ஆளும் கட்சிக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மை இருந்தமையால் அந்தப் பிரேரணை மிக எளிதில் நிறைவேற்றப்பட்டது.

இப்போதும் மரபுக்கு மாறாக மற்றொரு நம்பிக்கையில்லாப் பிரேரணை பேசுபொருளாகியுள்ளது. பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுக்கு எதிராகவே பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் கையளித்துள்ளனர்.

அருண ஜயசேகர இராணுவத்தின் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக இருந்தபோதே 2019ஆம் ஆண்டு உயர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் இடம்பெற்றது என்றும் எனவே, அவர் அந்த விசாரணைகளில் தலையீடு செய்யலாம் என்றும் அந்த பிரேரணையில் வாதிடப்பட்டுள்ளது. எனவே, அத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அவர் பிரதி பாதுகாப்பு அமைச்சராகக் கடமையாற்றுவது முறையாகாது என்ற அடிப்படையிலேயே அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் அதனை கையேற்ற போதிலும், விவாதத்துக்காக அதனை சபையின் நாளாந்த நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பது என்பது சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது. பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டு வருவது மரபுக்கு முரணானது என்று அப்பிரேரணைக்கு எதிரானவர்கள் வாதிடுகின்றனர். அதேவேளை, பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு சட்டப்பூர்வமாக பொறுப்புக்கள் வழங்கப்படவில்லை என்பதால், அவர் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொட்பான விசாரணைகளில் தலையிடுவார் எனக் கூற முடியாது என்றும் வாதிடப்படுகிறது.

அதேவேளை, சிங்கள தேசியவாதிகள் தமது கண்ணோட்டத்தில் இந்தப் பிரச்சினையை அணுகுகின்றனர். புலிகளுக்கு எதிராகப் போரிட்ட ஒரு போர் வீரனுக்கு எதிராக இந்தப் பிரேரணை கொண்டு வருவதால் அதனை எதிர்க்க வேண்டும் என்பதே அவர்களது வாதமாகும். தாயக மக்கள் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீரவும் இந்தக் கருத்தைத் தெரிவித்து இருந்தார். பழைய கதைகளை விடுத்து, தற்போது நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை கருத்தில் கொண்டு பாதுகாப்பு பிரதி அமைச்சருக்க எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டு வருவதே பொருத்தமானதாகும் என்று அவர் வாதிட்டு இருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் 2019ஆம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னரும் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தொடர்ந்து கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக சில காலம் கடமையாற்றினார். அப்போதும் விசாரணையும் நடைபெற்றது. அவரும் இப்போது போலவே பாதுகாப்பு தொடர்பான முக்கிய பொறுப்பில் இருந்தார். அப்போது அவர் இராணுவ பொறுப்பிலிருந்து இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று எவரும் கோரவில்லை.

அதேவேளை, குண்டுத் தாக்குதல் இடம்பெறும் போது தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளராக கடமையாற்றும் ரஞ்சித் மத்தும பண்டாரவே சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பான அமைச்சராக இருந்தார். அப்போது அவரது கட்சியான ஐதேகவின் தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் தேசிய பாதுகாப்பு சீர்குலைந்ததாலேயே குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது என்று அப்போது ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி குற்றஞ்சாட்டியது. ஆனால் அவர் அவ்வமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யவில்லை. அவர் அவ்வமைச்சர் பொறுப்பில் இருக்கும் போதே குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அமிர்தலிங்கத்துக்கு எதிராக ஆறில் ஐந்து பெரும்பான்மை பலம் கொண்ட ஆளும் ஐதேகவே நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தது. ஆனால் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரும் போது அமைச்சர் இருக்கும் ஆளும் கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்கிறது. அத்தோடு, எதிர்க் கட்சியின் திலித் ஜயவீர போன்ற உறுப்பினர்களும் அதனை ஆதரிப்பதில்லை. இந்த நிலையில், அது நிறைவேறுமா என்ற கேள்வியும் எழுகிறது.

அது ஐக்கிய மக்கள் சக்திக்கும் தெரியும். ஆயினும், அவர்கள் ஆளும் கட்சியின் அனுமதியுடன் ஆளும் கட்சியையே விமர்சிக்க பாராளுமன்றத்தை மேடையாக பாவிக்கவே முயல்கின்றனர். இது ஒன்றும் புதிய விடயமல்ல. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையில் மக்கள் விடுதலை முன்னணியும் தேசிய மக்கள் சக்தியும் ஆளும் கட்சியை விமர்சிக்கப் பாராளுமன்றத்தில் இது போன்ற உத்திகளை கையாண்டனர்.

திலித் ஜயவீர கூறுவதைப் போல, பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராகவோ அல்லது அரசாங்கத்துக்கு எதிராகவோ தற்போதைய குற்றச்செயல்கள் காரணமாக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டு வருவதாக இருந்தாலும் எந்தக் கட்சி அதனைக் கொண்டு வருவது என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில் தற்போது எதிர்க்கட்சியில் இருக்கும் அனைத்து பிரதான கட்சிகளும் ஏற்கனவே நாட்டை ஆட்சி புரிந்த கட்சிகளாகும். அக்கட்சிகளின் ஆட்சிக் காலங்களிலும் நாட்டில் குற்றச் செயல்கள் குறைந்திருக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி புரியவில்லை என்று எவரும் வாதிட முடியாது. ஐதேகவின் தலைவர்களில் பெரும்பாலானவர்களும் பெரும்பாலான ஆதரவாளர்களுமே ஐதேகவிலிருந்து பிரிந்து 2020ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினார்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்கள் பலர் கடந்த கால ஐதேக அரசாங்கங்களில் அமைச்சர்களாகவம் இருந்துள்ளனர்.

எனவே, தற்போதைய பிரதான கட்சிகளில் எவருக்கும் தமது ஆட்சிக் காலத்தில் குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை என்றோ குறைவாக இடம்பெற்றன என்றோ கூற முடியாது.

பொலிஸ் அறிக்கைகளின் படி இவ்வருடம் இது வரை சுமார் 85 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் சுமார் 45 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த வருடம் நுற்றுக்கு மேற்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 103 பேர் கொல்லப்பட்டனர்.

தற்போதைய நிலையில், இவ்வருடமும் கடந்த வருடத்தில் போலவே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் எண்ணிக்கை நூறுக்கு அதிகமாகலாம். ஆயினும், இவ்வருடம் கடந்த வருடத்தைப் பார்க்கிலும் அதிகமாக கொலைகள் இடம்பெறும் என்று கூற முடியாது. பெரும்பாலும் கொலைகள் அதை விட குறைவாகவே இருக்கும். அதாவது, குற்றச் செயல்களைப் பொறுத்தவரை கடந்த வருடம் இவ்வருடத்தைப் பார்க்கிலும் மோசமாக இருந்துள்ளது.

2023ஆம் ஆண்டில் 2024 மற்றும் 2025ஆம் ஆண்டுகளை பார்கிலும், குறைவாகவே கொலைகள் இடம்பெற்றுள்ளன. அவ்வருடமும் நூற்றுக்கு அதிகமான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் 61 பேர் மட்டுமே அவற்றில் கொல்லப்பட்டுள்ளனர்.

எனினும் கடந்த வருடங்களைப் பார்க்கிலும், இந்த வருடம் குற்றச் செயல்களும் கொலைகளும் குறைந்திருந்தாலும். நாட்டில் தற்போது இடம்பெறும் குற்றச் செயல்களினதும் கொலைகளினதும் எண்ணிக்கை பாரதூரமானதாகவே கருதப்பட வேண்டும். ஒரு காலத்தில் நாட்டில் தூர கிராமமொன்றிலாவது ஒரு கொலை இடம்பெற்றால் அது பல வாரங்களாக ஊடகங்களுக்கு முக்கிய செய்தியாக இருக்கும். 1951ஆம் ஆண்டு இடம்பெற்ற சதாசிவம் கொலை அதற்கு ஓர் உதாரணமாகும். அச்சம்பவத்தைப் பல வருடங்களாக ஊடகங்கள் முக்கிய சம்பவமாகக் கருதின. 1978ஆம் ஆண்டு இடம்பெற்ற டல்ரின் இங்ரம் கொலையும் முன்னைய தலைமுறையினரிடையே இன்னமும் பேசுபொருளாகிறது.

எனவே தற்போதைய குற்றச் செயல்களின் எண்ணிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றல்ல. எனவே அரசாங்கம் தற்போதைய குற்றச் செய்லகளை கட்டுப்படுத்த புதிய உத்திகளை கண்டுபிடிப்பது கட்டாய கட்மையாக உள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்றை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பை தானாகவே மாற்றிவிடுகின்றது.

வாவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்தபோன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களில் இருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழுவடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை.

இதேபோலவே, மனித இனம், தன்னை வளம்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே, சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### இரும்பு வேலி தேவை

நல்லத்தண்ணி, மஸ்கெலியா பிரதான வீதி கடந்த வருடம் காபட் இடப்பட்டு செப்பனிட்ட நிலையில், பிரதான வீதியில் விபத்துகள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக லக்ஷபான பகுதி வளைவுகளில் பாரிய பள்ளத்தாக்கு உள்ளதுடன் ஒரு சில பகுதிகள் மவுஸ்ஸாக்கலை நீர் தேக்க கரையோர பகுதிகளாகும்.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் சிவனடி பாதமலை பருவகாலம் ஆரம்பித்தவுடன் அதிக அளவில் வாகனங்கள் வந்து செல்லும் இந்த வீதியில் இரும்பினால் செய்யப்பட்ட நிரந்தர பாதுகாப்பு வேலி அமைக்க நோர்வூட் பிரதேச வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.என வாகன சாரதிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– செ.தி.பெருமாள்





### கடல் கடந்து வரும் AIஇன் புதிய அலை

# உலக மயமாக்கலின் புதிய அத்தியாயம்

லக்ஷிகா யூட்ஜெமினி,
புவியியல் சிறப்புக்கலை,
புவியியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

பழைய ஹாலிவூட் திரைப்படங்களில், கதாநாயகன் ஒரு புதிய உலகத்தைத் தேடி கப்பலில் புறப்படுவான். அங்கே, புதிய வாழ்க்கை, புதிய கனவுகள் அவனுக்காகக் காத்திருக்கும். ஒரு காலத்தில், அதுதான் உலகமயமாக்கலின் அடையாளமாக இருந்தது. பிறகு, விமானங்கள் வந்தன, இணையம் வந்தது. உலகம் நம் கைகளுக்குள் சுருங்கிவிட்டது. ஆனால் இப்போது ஒரு புதிய அலை, புதிய திரைக்கதையை எழுதத் தொடங்கியிருக்கிறது. அந்த அலையின் பெயர், செயற்கை நுண்ணறிவு (AI). இது வெறும் தொழில்நுட்ப புரட்சி அல்ல, இது ஒரு சமூகப் புரட்சி, பொருளாதாரப் புரட்சி, ஏன், நம் மனித அடையாளத்தையே புரட்டிப் போடப் போகும் ஒரு புதிய அலை. இந்த அலை நம்மை எங்கே கொண்டு செல்லப் போகிறது? நாம் மீண்டும் ஒரு புதிய உலகத்தைத் தேடப் போகிறோமா அல்லது இந்த அலையில் மூழ்கப் போகிறோமா?

உலக வரலாற்றைப் புரட்டிப் போட்ட பல கண்டுபிடிப்புகளில், மனிதனின் அறிவை மிஞ்சும் திறன் கொண்ட செயற்கை நுண்ணறிவு (AI) எனும் புதிய அலை இன்று நம்மை ஆட்கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில், உலகம் என்பது நிலங்களால் பிரிக்கப்பட்ட, கலாசாரங்களால் வரையறுக்கப்பட்ட ஒரு பரந்த நிலப்பரப்பாக இருந்தது. அதன்பின், கப்பல்களும், விமானங்களும் உலகைச் சுருக்கின. இணையம் அந்தச் சுருக்கத்தை ஒரு விரல் நுனியில் கொண்டுவந்தது. இன்று, அந்தப் பயணத்தின் அடுத்த கட்டமாக, AI ஒரு சக்திவாய்ந்த கடலலையாகப் புறப்பட்டு, நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் தொட்டுச் செல்கிறது. இது வெறும் தொழில்நுட்ப வளர்ச்சி மட்டுமல்ல, அது உலகமயமாக்கலின் புதிய அத்தியாயம்.

முந்தைய உலகமயமாக்கலில், பொருட்களும், பணமும், மக்களும் உலகெங்கும் பயணித்தன. இன்று, தரவு (data) எனும் புதிய எரிபொருள், AI எனும் ராட்சத இயந்திரத்தால் இயக்கப்பட்டு, நொடிக்கு நொடி உலகம் முழுவதும் பாய்ந்து செல்கிறது. ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் தலைவர், சிங்கப்பூரில் அமர்ந்துகொண்டு, அமெரிக்காவில் உள்ள தன் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை, AI-யின் உதவியோடு நிகழ் நேரத்தில் கண்காணிக்கிறார். அதேசமயம், இந்தியாவிலுள்ள ஒரு விவசாயி, தன் விளைநிலத்தின் மண் வளத்தை AI-அடிப்படையிலான சென்சார்களின் உதவியோடு சோதித்து, விளைச்சலை அதிகரிக்கிறார். இது, நாடுகளுக்கிடையிலான தூரத்தை குறைப்பது மட்டுமல்ல, பொருளாதாரத்தின் புதிய பரிமாணங்களையும் திறக்கிறது.

இந்த அலை, வெறும் வணிகத்தை மட்டும் ஆக்கிரமிக்கவில்லை, அது நம் சமூக மற்றும் கலாச்சார வாழ்விலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. ஒரு ஸ்பானிய மொழிப் பாடகர் பாடும் பாடலை, AI சில நொடிகளில் தமிழில் மொழிபெயர்த்து, அதே உணர்வோடு நம்மால் கேட்க முடிகிறது. இது, மொழி எனும் எல்லையைத் தாண்டி, உலகளாவிய கலைஞர்களை ஒருவருக்கொருவர் நெருக்கமாக்குகிறது. ஒரு ஜப்பானிய அனிமேஷன் கலைஞரின் படைப்பை, தமிழகத்தில் உள்ள ஒரு ரசிகர் உடனடியாகப் பார்த்து ரசிக்க முடிகிறது. இந்த தொழில்நுட்பம், உலகக் கலாசாரத்தை ஒரு பொதுவான அரங்கில் கொண்டுவந்து, புதிய கலை வடிவங்களுக்கும், சிந்தனைகளுக்கும் வித்திடுகிறது.

### AI அலைகளின் பின்னணியில் உள்ள சவால்கள்:

இந்த வேகமான அலையின் பின்னணியில் பல சவால்களும் ஒளிந்துள்ளன. AI-யின் எழுச்சி, வேலைவாய்ப்பின் எதிர்காலம் குறித்த அச்சத்தை உருவாக்குகிறது.

பல வேலைகள் தானியங்கு மயமாக்கப்படுவதால், மனிதர்களின் வேலைகள் பறிபோகுமா என்ற கேள்வி எழுகிறது. உதாரணமாக, தரவு உள்ளீட்டு வேலைகள், சில வகை கணக்கியல் பணிகள் போன்றவற்றை AI மிகவும் திறமையாகச் செய்ய முடியும். ஆனால், அதே நேரத்தில், AI-யை நிர்வகிக்கவும், புதிய AI அமைப்புகளை உருவாக்கவும், தரவுகளைப் பகுப்பாய்வு செய்யவும் புதிய வேலைகள் உருவாகின்றன. எனவே, மனிதர்கள் தங்கள் திறன்களைப் புதுப்பித்துக்கொண்டால் மட்டுமே, இந்த அலையில் நீந்த முடியும்.

இன்னொரு முக்கியமான சவால், தரவு பாதுகாப்பு மற்றும் நெறிமுறைகள். AI ஆனது பெரும் அளவிலான தனிநபர் தகவல்களைச் சேகரித்து பகுப்பாய்வு செய்கிறது. இந்தத் தகவல்கள் தவறான கைகளில் சிக்கினால், அது பெரும் ஆபத்தை விளைவிக்கக்கூடும். எனவே, AIயை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும், அது எந்த எல்லைகளைத் தாண்டக்கூடாது என்பது குறித்த வலுவான நெறிமுறைகளும், சட்டதிட்டங்களும் உலக அளவில் தேவைப்படுகின்றன.

இந்த AI அலை, நம்மை ஒரு புதிய உலகத்திற்கு அழைத்துச் செல்கிறது என்பதில் சந்தேகமில்லை. இது நாடுகளுக்கிடையிலான வணிகத்தை மேலும் திறமையாக்கும்; கல்வியை உலகளாவியதாக மாற்றும், மருத்துவத்தில் புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுக்கும். அதே சமயம், இது ஒரு சமமற்ற உலகத்தையும் உருவாக்கலாம். AI தொழில்நுட்பத்தில் பின்தங்கிய நாடுகள், இந்த அலையால் பின்னுக்குத் தள்ளப்படக்கூடும். எனவே, இந்த அலை அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க, உலக நாடுகள் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம்.

### எதிர்காலத்தின் திசை எது?


AI ஒரு சக்தி வாய்ந்த கருவி மட்டுமல்ல, அது உலகத்தின் எதிர்காலத்தை வடிக்கும் ஒரு சிற்பி. அந்தக் கடலலை சீரான பயணத்திற்குச் சாதகமானதா, அல்லது பெரும் அழிவை ஏற்படுத்துமா என்பது, நாம் அதை எவ்வாறு கையாள்கிறோம் என்பதைப் பொறுத்தது. இந்த அத்தியாயத்தின் இறுதிப் பக்கங்கள் இன்னும் எழுதப்படவில்லை. அந்தப் பக்கங்களை எழுதுவது நாம் தான்.

AI-யின் அலை, உலகமயமாக்கலின் அடுத்த அத்தியாயத்தைத் தொடங்கிவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. இது, வேலைவாய்ப்புகள், வர்த்தகம், சமூக உறவுகள் என அனைத்திலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டது. ஆனால், இது ஒரு பன்முகத்தன்மை கொண்ட உலகத்தை உருவாக்கும் வாய்ப்பை வழங்குமா அல்லது ஒருசில நிறுவனங்கள் மற்றும் நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் ஒருதலைபட்சமான உலகத்தை உருவாக்குமா என்பதை காலம் தான் சொல்ல வேண்டும்.

நாம் விழிப்புடன் இருந்தால் இந்த AI அலையின் ஆற்றலைச் சரியாகப் பயன்படுத்த முடியும். இல்லையென்றால், அது உலகை மேலும் பிளவுபடுத்தி, ஏற்றத்தாழ்வை அதிகரிக்கும் ஒரு சக்தியாக மாறிவிடும். இந்த AI அலைக்குத் தயாராவதும், அதை ஒழுங்குபடுத்துவதும் இன்று மிகவும் அவசியமானது. AI நமக்கு ஒரு புதிய யுகத்தின் கதவைத் திறந்து விட்டிருக்கிறது. இந்தக் கதவுக்குப் பின்னால் என்ன இருக்கிறது என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்.




# போதை அடிமையாதலை தடுக்கும் முறைகள்




நடராசா கோபிராம்,
உளவியல்துறை மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.

(செவ்வாய்க்கிழமை தொடர்ச்சி...)

* பொழுதுபோக்குகளில் ஈடுபடல் - ஓய்வு நேரத்தில் தமக்கு பிடித்தமான விளையாட்டுக்களிலோ, செயற்பாடுகளிலோ ஈடுபட ஊக்குவித்தல்.

* நாளேடு எழுதுதல் - தான் செய்யும் தினசரி செயற்பாடுகள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றை நாளேட்டில் (Diary) தவறாது எழுதிவருவது இப் பழக்கத்திலிருந்து மீண்டெழுவதற்கு உதவுகிறது. இதனைத் தொடர்ந்து செய்வதின் ஊடாக புதிய எண்ணங்கள் ஏற்படுத்தப்படுவதுடன் நடத்தைகளும் வலுவூட்டப்படும் அத்துடன் மனமானது கட்டுப்பாட்டுடன் இயங்கவும் தொடங்குகிறது.

* வெறுப்பூட்டல் முறை- அருவருப்பு அளித்தல் மற்றும் அதிர்ச்சி விடயங்களுடன் போதைப்பொருள் இன்பத்தையும் இணைத்து அனுபவிக்க வைப்பதன் மூலம் வெறுப்பை ஏற்படுத்துவது இம்முறை ஆகும். போதைப் பொருளை உட்கொள்ள முயலும்போது, மின் அதிர்ச்சி கொடுத்தல் அல்லது வெறுப்பூட்டும் காட்சியை கற்பனை செய்ய வைப்பதன் மூலம் இது இடம்பெறும்.

* குடும்ப ஆற்றுப்படுத்தல்- போதைக்கு அடிமையான நபர் குடும்பத்தில் உள்ளார் ஆயின் அவரை மீட்டெடுக்க வேண்டிய கடமை முழுக்குடும்பத்திற்கும் உண்டு. குறித்த நபரை போதைப்பொருள் பழக்கத்திலிருந்து எவ்வாறு மீண்டெழ பங்களிப்புச் செய்யலாம் என கற்றுக் கொடுக்க வேண்டும். இத்துடன் பிள்ளைவளர்ப்பு முறை, பிரச்சினை தீர்த்தல் நுட்பங்கள் போன்றனவும் கற்றுக் கொடுக்கப்படும்.

* கலை வழி குணமாக்கல்- சித்திரம், ஓவியம் வரைதல், சிற்பங்கள் செய்தல், கட்டுரை, கவிதை, சிறுகதைகள் எழுதித் தூண்டுவதின் ஊடே துன்பம் தீரும் அனுபவம் குறைவடைந்து குணமாக வழிவகுக்கும்.

* குழுவழி குணமாக்கல்- குறித்த பிரச்சினை உள்ளவர்கள் குழுவாக இணைந்து பிரச்சினை தீர்ப்பது பற்றி, உறவுகளை மேம்படுத்துவது, உதவுவது, ஆரோக்கியமாக பயணிப்பது போன்றவற்றிற்கான தெளிவுகிடைப்பது மட்டுமல்லாமல், நம்பிக்கை, ஒற்றுமை, குழு இணைவு, ஆளிடைத் தொடர்பு, உதவி செய்யும் மனப்பாங்கும் ஏற்பட்டு போன்ற அடிமையிலிருந்து மீண்டெழவும் உதவுகின்றது.

* ஊக்குவித்தல்- இப்பழக்கத்தை கைவிட எண்ணும் துணைநாடி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் அவரை ஊக்கப்படுத்துவதுடன் சிறுவெகுமதி வழங்கல், பாராட்டுதல், புகழ்தல்; என்பன தன்நம்பிக்கையை அதிகரித்து குறித்த போதைப்பழக்கத்தை களைய உதவுகின்றது.

* நச்சுநீக்கல்- மருந்துகள், ஊசி மூலம் போதையினால் ஏற்பட்ட நச்சுக்கள் அகற்றப்படும். இது 'அமிலம் அகற்றல் (Detoxification)" எனவும் அழைக்கப்படும். இதனுடன் இணைந்து விற்றமின் மாத்திரைகளும் வழங்கப்படும். ஏன் எனில் அவர், போதிய சத்தான உணவுகள் உண்ணாததால் இது வழங்கப்படும். அத்துடன், தூக்கமின்மை சீர் செய்வதற்கான மருந்துகளும், ஈரல்,குடல் பாதிப்புக்களுக்கான சிகிச்சையும் அளிக்கப்படும்.

* சமூக ஆதரவு சமூக மட்டத்தில் குறித்த நபரை இயங்க எத்தணித்தல். அத்துடன் சமூக செயற்பாடுகள், திருவிழாக்கள் மற்றும் கருத்தரங்குகள், தொழிற்பயிற்சிப் பட்டறைகளில் ஈடுபடவைத்தல். அத்துடன், விழிப்புணர்வு செயற்படுத்தலும், தொண்டர் சேவைகளிலும் இணைந்து பணியாற்று செய்வதுடன் சமூக நலத் திட்டங்களிலும் ஈடுபடச் செய்தல்.

* ஆசைமறுப்பு பயிற்சி அளித்தல்- போதை ஆசை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஊட்டப்படுகிறது. சகபாடிகள் மற்றும் சூழல் என்ற அடிப்படையில் இடம்பெறுகிறது. முதலில் ஒருவருக்கு சிறிதளவு போதைப்பொருள் கொடுத்தே அறிமுகம் செய்யப்படுகிறது. அதன் பின் அவருக்கு அதிகம் உட்கொள்ள வேண்டும் என்ற ஆசை தொடங்குகிறது. இதனால் அந்த ஆசையை மறுப்பதற்கான பயிற்சிகளை உரிய முறையில் அளிக்க வேண்டும்.

* தூண்டிகளை விலக்கல்- போதைப்பொருள் பாவனை தூண்டுவோர் மற்றும் போதை இலகுவாகக் கிடைக்கும் சூழலிலிருந்து விலகி இருத்தல். அத்துடன், போதையிலிருந்து மீள போதையை நினைவூட்டும் அனைத்தையும் தவிர்த்து உறுதியான தீர்மானத்துடன் அதிலிருந்து மீள வேண்டும்.

* சுய முகாமைத்துவம்- போதை தொடர்பான சுய விழிப்புணர்வு மற்றும் கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். போதை அடிமையால் ஏற்படும் பிரச்சினைகள், விளைவுகள் பற்றிய தெளிவும் இருத்தல் அவசியம். சுயமாக தீர்மானம் எடுக்கவும், தன்நம்பிக்கையுடன் செயற்படவும் பழகுதல்.

அத்துடன், உளக்கல்வியை பெற்றுக் கொள்வதுடன், சரியாக மீண்டெழும் ஆவலையும், உறுதியான தீர்மானத்தை கடைப்பிடிப்பதன் ஊடாக போதை அடிமையிலிருந்து மீண்டெழ முடியும்.



கின்சாஸா

கிளர்ச்சியாளர்கள் தாக்குதலில்

# 52 பேர் பரிதாபமாக பலி



கொங்கோ ஜனநாயக குடியரசில் கிராமத்துக்குள் புகுந்து கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 52 பேர் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.


ஆபிரிக்காவின் 2ஆவது பெரிய நாடு கொங்கோ ஜனநாயக குடியரசு. இங்கு ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய பல்வேறு கிளர்ச்சி குழுக்கள் செயல்படுகின்றன. உகாண்டாவை மையமாக கொண்டு செயல்படும் இந்த குழுவினர் எல்லையோர கிராமங்களில் நுழைந்து பொதுமக்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அதன் ஒருபகுதியாக எம்-23 கிளர்ச்சி குழுவினர் கோமா உள்ளிட்ட முக்கிய நகரங்களை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். எனவே, இந்த கிளர்ச்சி குழுக்கள் அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளன.

இந்தநிலையில், கிவு மாகாணம் பாப்பரே கிராமத்துக்குள் கிளர்ச்சி குழுவினர் நுழைந்தனர். அப்போது கண்ணில் படுகிறவர்களையெல்லாம் அந்த கும்பல் துப்பாக்கியால் சுட்டது.

இதனால் வீடுகளுக்குள் ஓடிச் சென்று பலர் தப்ப முயன்றனர். ஆனால், அவர்களது வீடுகளும் தீ வைத்து கொளுத்தப்பட்டன. இதில் 52 பேர் உயிரிழந்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

மேலும் 100 பேரை பணய கைதிகளாக அந்த கும்பல் கடத்திச் சென்றது. எனவே, அவர்களை மீட்க பொலிஸார் தீவிரம் காட்டி வருகின்றனர். இதனையடுத்து உகாண்டா எல்லையில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அரசாங்கம் அவர்களை அறிவுறுத்தி உள்ளது.



நேபிடா

# மியன்மாரில் டிசெம்பர் 28 தேர்தல்

உள்நாட்டு கலவரங்கள், மோதல்கள் நீடித்து வரும் நிலையில், பாராளுமன்றத்திற்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளதாக இராணுவ ஆட்சித் தலைவர் மின் ஆங் ஹ்லைங் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை கவிழ்த்து விட்டு 2021ஆம் ஆண்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.

இதனையடுத்து, ஆங் சான் சூகி உள்ளிட்ட ஆளுங்கட்சி தலைவர்களை கைது செய்து வீட்டுச்சிறையில் அடைத்தனர். இதற்கு நாடு முழுவதும் எதிர்ப்புகள் கிளம்பின. மேலும் மீண்டும் பொதுத்தேர்தலை நடத்த கோரி மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

கடந்த 4 ஆண்டுகளாக இந்த போராட்டம் நடந்து வரும் நிலையில் தேர்தலை நடத்துவதற்கான சூழல் தற்போது உருவாகி உள்ளது.

அதன்படி, எதிர்வரும் டிசெம்பர் 28ஆம் திகதி முதல் பல கட்டங்களாக தேர்தல் நடத்தப்படும் என இராணுவ ஆட்சித் தலைவர் மின் ஆங் ஹ்லைங் தெரிவித்துள்ளார்.

மியன்மாரின் பெரும்பான்மையான பகுதிகள் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ளன. அதனால், அங்கு எப்படி தேர்தல் நடத்தப்படும் என்பதில் குழப்பம் உள்ளது.

அபுஜா

ஆற்றில் படகு கவிழ்ந்த்தில்

# 40 பேர் மரணம்?

நைஜீரியாவில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 40 பேர் இறந்திருந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

சொஹொடா மாகாணம் கடா கிராமத்தைச் சேர்ந்த 50 பேர் திங்கட்கிழமை (18) அன்று ஆற்றில் படகு மூலம் கொரொன்யா பகுதியில் உள்ள சந்தைக்குச் சென்றுள்ளனர். அப்போது எதிர்பாராத விதமாக ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற மீட்புக்குழுவினர், 10 பேரை உயிருடன் மீட்டுள்ளனர். மேலும் 40 பேர் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், அவர்களைத் தேடும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

படகு கவிழ்ந்து 24 மணி நேரம் ஆன நிலையில் 40 பேரும் இறந்திருந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த 2024இல் படகு கவிழ்ந்த விபத்தில் 326 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நைஜீரியாவில் படகு போக்குவரத்து அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. படகை இயக்குபவர்கள் லைப் ஜாக்கெட் போன்ற பாதுகாப்பு கவசங்களைப் பயன்படுத்தத் தவறுகின்றன, இதுவே விபத்துக்குக் காரணமாக அமைகிறது.



சசோடி

80 மாணவர்களின்

# உயிரை காத்த ஆசிரியர்



ஜம்மு-காஷ்மீரின் கிஸ்த்வார் மாவட்டத்தில் மேகவெடிப்பால் திடீரென பெரு மழை பெய்தது. இதில் 60-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், 80 மாணவர்களை காப்பாற்றிய சசோடி கிராம தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஹுக்கும் சந்த் நேற்று கூறியதாவது, கடந்த 14ஆம் திகதி 11.40 மணியளவில் எங்கள் கிராமத்தில் சீக்கியர்கள் இலவச உணவு வழங்க ஏற்பாடு செய்திருந்தனர். அதற்காக மாணவர்களை உணவு சாப்பிட அனுப்புமாறு அவசரப்படுத்தினர்.

மறுநாள் சுதந்திர தினம் என்பதால், விழாவுக்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தோம். அதனால் மாணவர்களை அனுப்பாமல் தாமதப்படுத்திக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில்தான் பெரிய மலை ஒன்று பயங்கர சத்தத்துடன் இடிந்து சரிந்தது. கிராமத்தில் பல வீடுகள் மண்ணில் புதைந்தன. அதைப் பார்த்ததும், மூத்த மாணவர்களை உயரமான பகுதிக்கு ஓடும்படி கத்தினேன். சிறிய குழந்தைகளை பிடித்துக் கொண்டு வெளியில் செல்லாதபடி பார்த்துக் கொண்டேன். அதன் பின்னர் இலவச உணவு வழங்கும் இடத்துக்கு சென்று பார்த்தேன். அங்கு பலருடைய உடல்கள் மிதந்து கொண்டிருந்தன.

இடிபாடுகளில் சிக்கியிருந்த 30 பேரை வெளியில் கொண்டு வந்து காப்பாற்றினேன் ஆனால், என்னுடைய சகோதரன் மண்சரிவில் உயிரிழந்து விட்டார் என்றார்.

புதுடெல்லி

“2040இல் இந்திய விண்வெளி

# வீரர் நிலவில் தரையிறங்குவார்

எதிர்வரும் 2040ஆம் ஆண்டு இந்திய விண்வெளி வீரர் நிலவில் தரையிறங்குவார் என மக்களவையில் இந்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த 2014இல் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றதும் விண்வெளித் துறை சார்ந்த சீர்திருத்தங்களை மேற்கொண்டார் என அமைச்சர் ஜிதேந்திர சிங் தனது பேச்சில் குறிப்பிட்டார்.

2020 முதல் விண்வெளித் துறையில் தனியார் நிறுவனங்களுக்கு இந்தியா வாய்ப்பு அளித்து வருகிறது. அதன் மூலம் தேசத்தின் விண்வெளிப் பொருளாதாரம் சுமார் 8 பில்லியன் டொலர்களை எட்டியுள்ளது. இது அடுத்த பத்தாண்டுகளில் 45 பில்லியன் டொலர்களைத் தொடும் என்று அவர் தெரிவித்தார்.

“2026-ல் வியோமித்ரா என்ற ரோபோவை கொண்டு ஆளில்லா விண்வெளிப் பயணத்தை இந்தியா மேற்கொள்ளும். அதைத் தொடர்ந்து 2027இல் மனிதர்களை விண்வெளி பயணத்துக்கு அனுப்பும் ககன்யான் திட்ட பணிகள் நடைபெறும். 2035இல் ‘பாரத் அந்தரிக்ஷ் நிலையம்’ என்ற விண்வெளி நிலையத்தை இந்தியா நிறுவும்.

தொடர்ந்து 2040இல் இந்திய விண்வெளி வீரர் நிலவில் தரையிறங்கி தனது தடத்தை பதிப்பார். இது 2047இல் வளர்ச்சி அடைந்த பாரதம் என்பதை அறிவிக்கும் விதமாக அமையும்” என அவர் பேசினார்.





# சம்பியனான சாய்ந்தமருது பிளையிங்க் ஹோஸ்

■ எம்.எஸ்.எம்.ஸாகிர்




கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், நெஸ்ட் இன்டர்நஷனல் ப்ரைவேட் லிமிடெட்டின் அனுசரணையில் நடைபெற்ற சிறந்த நீலங்களின் சவால் சமர் கிண்ணத் தொடரில் சாய்ந்தமருது பிளையிங்க் ஹோஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கல்முனை சந்தாங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை(16) அன்று நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றே பிளையிங்க் ஹோஸ் சம்பியனானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய லெஜன்ஸ், 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 123 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பிளையிங்க் ஹோஸ், 16.2 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இறுதிப் போட்டியின் நாயகனாக பிளையிங்க் ஹோஸின் எஸ்.எம்.ஸுஜான் தெரிவானார்.

சம்பியனான பிளையிங்க் ஹோஸுக்கு கிண்ணத்துடன் 60,000 ரூபாய் பணப்பரிசு வழங்கப்பட்டதுடன், இரண்டாமிடம் பெற்ற லெஜன்ஸுக்கு 30,000 ரூபாய் பணப்பரிசு வழங்கி வைக்கப்பட்டது.

சின்சினாட்டி பகிரங்க

# டென்னிஸ் தொடர் சம்பியனான அல்கரஸ்



சின்சினாட்டி பகிரங்க டென்னிஸ் தொடரில் உலகின் இரண்டாம் நிலை வீரரான கார்லோஸ் அல்கரஸ் சம்பியனானார்.

செவ்வாய்க்கிழமை (19) அன்று நடைபெற்ற நடப்புச் சம்பியனான ஜனிக் சின்னருனான இறுதிப் போட்டியின் முதலாவது செட்டில் ஸ்பெய்னின் அல்கரஸ் 5-0 என முன்னிலையில் இருந்த நிலையில் உபாதை காரணமாக போட்டியிலிருந்து முதல்நிலை வீரரான சின்னர் விலகிய நிலையிலேயே அல்கரஸ் சம்பியனானார்.

தனது அரையிறுதிப் போட்டியில் மூன்றாம் நிலை வீரரான அலெக்ஸான்டர் ஸ்வ்ரேவ்வை 6-4, 6-3 என்ற ரீதியில் நேர் செட்களில் வென்று அல்கரஸும், மற்றைய அரையிறுதிப் போட்டியில் பிரான்ஸின் டெரென்ஸ் அட்மனேயை 7-6 (7-4), 6-2 என்ற நேர் செட்களில் வென்று இத்தாலியின் சின்னரும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தனர்.

இதேவேளை எட்டாம் நிலை வீராங்கனையான ஜஸ்மின் பலோனியை 7-5, 6-4 என்ற நேர் செட்களில் வென்று இரண்டாம் நிலை வீராங்கனையான இகா ஸ்வியாடெக் சம்பியனாகியிருந்தார்.

தனது அரையிறுதிப் போட்டியில் கஸக்ஸ்தானின் எலெனா றைபகினாவை 7-5, 6-3 என்ற நேர் செட்களில் வென்று போலந்தின் ஸ்வியாடெக்கும், மற்றைய அரையிறுதிப் போட்டியில் ரஷ்யாவின் வெரோனிக்கா குடெர்மெட்டோவாவை 6-3, 6-7 (2-7), 6-3 என்ற செட் கணக்கில் வென்று இத்தாலியின் பலோனியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தனர்.




# மட்ரிட்டுடனான வினிஷியஸின் ஒப்பந்தப் பேச்சு முடக்கம்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் முன்களவீரரான வினிஷியஸ் ஜூனியரின் புதிய ஒப்பந்தமொன்று தொடர்பான பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மட்ரிட்டுடனான 25 வயதான வினிஷியஸின் ஒப்பந்தமானது 2027ஆம் ஆண்டு ஜூனுடன் முடிவடைகின்ற நிலையில், பருவகாலமொன்றுக்கு மேலதிக கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக 17 மில்லியன் யூரோக்களைப் பெறுகிறார்.


இந்நிலையில் வினிஷியஸின் ஊதியத்தை பருவகாலமொன்றுக்கு 20 மில்லியன் யூரோக்களாகவும், மேலதிக கொடுப்பனவுகளுடன் 30 மில்லியன் யூரோக்களாகமாறு அவரின் பிரதிநிதிகள் வேண்டுகின்றனர்.

ஆனால் மட்ரிட் மேலதிக 10 மில்லியன் யூரோ கொடுப்பனவுகள் இல்லாமல் 20 மில்லியன் யூரோக்களையே கழகம் வழங்க எதிர்பார்த்துள்ளது.

அந்தவகையில் 2030ஆம் ஆண்டு வரையில் ஒப்பந்தத்தை நீடிப்பற்கு இது மிகச்சிறிய தொகையென நம்பும் வினிஷியஸின் பிரதிநிதிகள், எவ்வாறு இப்பருவகாலம் செல்லுகின்றதென்பதை நோக்கும் பொருட்டு காத்திருக்கவுள்ளனர்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# லீட்ஸிடம் தோற்ற எவெர்ற்றன்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், லீட்ஸ் யுனைட்டெட்டின் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (19) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றது.

லீட்ஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை லூகாஸ் நெமச்சா பெற்றிருந்தார்.

# றபடா விலகல்

அவுஸ்திரேலியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரிலிருந்து தென்னாபிரிக்காவின் வேகப்பந்துவீச்சாளரான ககிஸோ றபடா விலகியுள்ளார்.

ஸ்கான்களுக்கு திங்கட்கிழமை (18) அன்று உட்படுத்தியிருந்த நிலையிலேயே 30 வயதான றபடாவின் கணுக்கால் காயத்தின் நீட்சி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தென்னாபிரிக்கக் குழாமில் வேகப்பந்துவீச்சாளரான கவெனா மபஹா இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை 20, ஒகஸ்ட் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.